DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 11.11.2025

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No.98/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW2. |
| Name | : | சரவணகுமார் ராவ் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 11.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டியில் குடியிருந்து தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, கன்னங்குறிச்சி கிளையில் உதவி மேலாளாராக வேலை செய்து வருகின்றேன். எனது வங்கியில் ஆஜர் எதிரி சேமிப்பு கணக்கினை பராமரித்து வருகின்றார். வங்கி கணக்கு எண். 060100710400039 ஆகும். இக்கணக்கு எண்ணிற்கு எங்கள் வங்கியிலிருந்து காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையானது மா.சா.ஆ.1 எங்கள் வங்கியின் காசோலை ஆகும்.

09.05.2025-ம் தேதியில் எங்கள் வங்கி கணக்கில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து அன்றைய தினமே திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 19.05.2025-ம் தேதி காசோலையானது திருப்பப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது இருப்பு வைக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. மேற்படி முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை. எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை எங்கள் வங்கியால் சொல்லவேண்டும் என்றால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் மைய காசோலை மாற்று பிரிவிலிருந்து (Centrailized Cheque Truncaition system) வரும் தகவலினை கொண்டு காசோலை தாக்கல் செய்யப்படும் வங்கியிலிருந்து திருப்பி விடுவார்கள்.

2. நான் சொல்வது வாய்மொழி சாட்சியம் மட்டுமே, ஆவணங்கள் எதுவும் ஆதரவா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மனுதாரர் தரப்பில் மறுவிசாரணை:–</u>**

காசோலை தாக்கல் செய்த தேதி 09.05.2025 மற்றும் வங்கியால் திருப்பப்பட்ட தேதி 12.05.2025–ம் தேதியாகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மா.சா.ஆ.2 ஆவணமானது எனது வங்கியை சேர்ந்தது இல்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2025.11.11 19:17:40 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.